இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் ம.தி.மு.க. உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அதோடு நான் நேற்றைய தினம் கோரியவாறு, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் நீதிமன்ற இடைக்கால ஆணையின் நகல் ஒன்றையும் எனக்கு அளித்துள்ளார். பேரவை விதி 56 மற்றும் 65 (xi)–ன்படி நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ள எப்பொருள் பற்றியும் ஒத்திவைப்புத் தீர்மானம் இருத்தல் கூடாது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. அதேபோல், பேரவை விதி 92 (i)–ன்படி, நீதி விசாரணையில் உள்ள எப்பொருள் மீதும் தம் கருத்தினைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாதெனத் தெளிவாக உள்ளது. எனவே, இப்பொருள் இன்னும் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் உள்ளதால் இப்பொருள்பற்றிப் பேரவையில் விவாதிக்க முடியாது என்று எனது முடிவைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய முடிவைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்களெல்லாம் ஏற்கெனவே அமைச்சர்களாக இருந்தவர்கள், பொறுப்பில் இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு இதுகுறித்துத் தெரியும். (குறுக்கீடுகள்) சட்டப் பேரவை விதி 65–இன்படி, ஒத்திவைப்புத் தீர்மானம் எதுவுமே நீதிமன்றத்தில் இருப்பது குறித்து எடுக்கக்கூடாது என்று இருக்கிறது. அதேமாதிரி, விதி 92–இன்கீழ் நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய எந்தப் பிரச்சினையையும் எழுப்பக் கூடாது; பேசக் கூடாது என்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் விதியை மீறி அதை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவது முறையல்ல. (குறுக்கீடுகள்)

(ஆ) வாணியம்பாடி, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீர்த் தொட்டியின் விஷ வாயுவால் 5 பேர் இறந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் தோல் பதனிடும் தொழிற்சாலையினுடைய கழிவுநீர்த் தொட்டியைச் சுத்தப்படுத்துகிறபோது அங்கே விஷ வாயு தாக்கி 5 பேர் 3 நாட்களுக்கு முன்னாலே இறந்துவிட்டார்கள். அவர்கள் மாண்டது குறித்து ஏற்பட்டிருக்கக்கூடிய சாலை மறியல், அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய பதற்ற நிலை குறித்து நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வரோ, துணை முதல்வரோ மற்ற சம்பந்தப்பட்ட அமைச்சரோ இல்லாததனால், இதுசம்பந்தமாக நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

(அ) கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.–வினர் கைது–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் mention பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) Mention பண்ணுங்கள்; அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பெரியார் மாவட்டத்தினுடைய திராவிட பஞ்சாலை முன்னேற்றச் சங்கத்தினுடைய நிருவாகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசியல் ஆலோசனைக் குழுச் செயலாளர், திருப்பூர் துரைசாமி அவர்களுடைய தலைமையில் முறைப்படி இயங்கி வந்திருந்தது. **

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உயர்நீதிமன்றத்தில் இல்லை. நான் order-ஐயே பார்த்துவிட்டேன். Please don't give false information. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: முடித்துக்கொள்கிறேன் நான். முடித்துக்கொள்கிறேன் நான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது நான் சொல்கிறேன் கேளுங்கள். Case-இன் facts உள்ளே போகாமல் . . .

திரு. ஓ. பன்னீர்செல்வம்: போகவில்லை. போகவில்லை. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சி துணைத் தலைவர், நான் சொல்கிறேன், கேளுங்கள். ** அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன. சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ** நான் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.